# மிக உயரிய வாக்குறுதி





இச்சிறு கையேடு எக்காலத்திலும் செய்யப்பட்ட
மிக உயரிய வாக்குறுதியைக் குறித்தும்,
அதை நிறைவேற்ற கடவுள் என்ன
செய்தார் என்றும் கூறுகிறது



## கடவுள் உங்களை நேசிக்கிறார் அத்துடன் தன் வாக்குறுதியைக் காக்கிறார்.

இவ்வுலகை தேவன் படைத்த நாளிலிருந்து
இவ்வுலக மக்களை நேசிக்கவும்,
கரிசனை கொள்ளவும் வாக்குறுதியளித்துள்ளார்.

மனிதர்கள் தங்கள் வாக்குறுதிகளை மீறுகிறார்கள்...
ஆனால் கடவுள் தன் வாக்குறுதிகளை காக்கிறவர்!





## மக்கள் தவறான காரியங்களைச் செய்வதினால் தங்கள் வாக்குறுதிகளை மீறுகிறார்கள்:

- அவர்கள் கடவுளை மறந்தார்கள்
- அவர்கள் கடவுளுக்கு கீழ்ப்படியாதிருந்தார்கள்
- அவர்கள் ஒருவரையொருவர் வேதனைப்படுத்துகிறார்கள்.

நம்முடைய இத்தவறான செயல்களுக்கான கடவுளின் தண்டனை நாம் அவருடன் ஜீவிக்க இயலாது என்பதே.

பாவம்: கடவுள் சொல்லாத காரியங்களை யோசித்தல், சொல்லுதல், செய்தலைக் குறிக்கும் வேதாகம சொல்

எல்லோரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி (ரோமர் 3:23)





## இயேசுவை அனுப்பியதின் மூலம் கடவுள் தன் வாக்குறுதியை நிறைவேற்றினார்.

மக்களை நேசிக்கும் அவரது வாக்குறுதியை கடவுள் ஒருபோதும் மீறவில்லை. அவர் மக்களை அதிகமாக நேசித்தபடியினாலே அவ்வன்பைக் காண்பிக்கும்படி தமது குமாரன் இயேசுவை மக்கள் மத்தியில் ஜீவிக்க அனுப்பினார்.

இயேசு ஒரு குழந்தையாக வந்தார்,<br>
அவர் யாரென்று வெகுசிலரே அறிந்திருந்தார்கள்...<br>
கடவுளின் ஒரேபேறான குமாரன்,<br>
இரட்சகர்.

"தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1 யோவான் 4:9)

---

இரட்சகர்: மற்றவர்களை அவர்களது தவறான சிந்தனை, செயல், பேச்சிலிருந்து காப்பாற்றக்கூடிய அல்லது தப்புவிக்கக் கூடியவர் (அதாவது பாவத்திலிருந்து) இயேசு மாத்திரமே.





இயேசு ஒரு மனிதனாக வளர்ந்தார்.
தான் சந்தித்த யாவருடனும்
அவர் தனது தகப்பனாகிய கடவுளைக் குறித்துப் பேசினார்.

மக்களுக்கு அவர்களை நேசிக்க கடவுள் கொடுத்த வாக்குறுதியை குறித்து சொன்னார்.

எவ்வாறு இறைவனை நேசிப்பது
எவ்வாறு ஒருவரையொருவர் நேசிப்பது என்று
இயேசு மக்களுக்கு போதித்தார்

எப்போதும்
பிள்ளைகளுக்காக
அவர் நேரம் ஒதுக்கினார்!

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களை தடைபண்ணாதிருங்கள்" (லூக்கா 18:16)





ஆனால் அநேகர் கடவுளை நேசிக்கவில்லை. அவர்கள் இயேசுவை கொலை செய்தார்கள்.

தமக்கு அதைச் செய்ய இயேசு இடமளித்தார். ஏனெனில் சகலரும் எக்காலத்திலும் செய்த சகல தவறான காரியங்களுக்கான தண்டனையை அவர் தன்மேல் ஏற்றுக்கொண்டார்.

## இயேசு மரித்தார்.

சகல மனிதர்களும் - உங்களை என்னைப் போன்ற மனிதர்கள் - தங்கள் தவறான செய்கைகளுக்கு மன்னிப்புப் பெற்று கடவுளோடு என்றென்றும் சிநேகமாக வாழும்படிக்கு

இயேசு உங்களுக்காக மரித்தார்,
ஏனெனில் அவர் உங்களை நேசிக்கிறார்.

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

---

மன்னிப்பு: தவறான சிந்தனை, செயல், பேச்சுக்கான தண்டனையை இரத்து செய்தல் அல்லது நீக்குதல்.

விசுவாசம்: நம்புகிற காரியத்தில் உறுதியாயிருந்து செயற்படுதல்





கடவுளின் வாக்குறுதி இயேசுவின் மரணத்தோடு முடிந்துவிடவில்லை. மிகச்சிறந்த பகுதி இனிமேல் தான் வரும்!

கடவுள் இயேசுவை உயிரோடு எழுப்பினார். அநேகர் அவரைக் கண்டு அவரோடு பேசினார்கள்.

## இயேசு மீண்டும் உயிரோடெழுந்தார்.

அவர் கடவுள் என்று காண்பிக்க, உங்கள் தவறான செயல்களைவிட்டு விடுபட்டு கடவுள் விரும்புகிற பிரகாரம் ஜீவிக்க, உதவிசெய்ய அவரிடம் வல்லமை உண்டு.

"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10)





இயேசு கடவுளோடிருக்கும்படி திரும்பினார்.

அவர் போகுமுன் இன்னும் சில வாக்குறுதிகளைக் கொடுத்தார்.

- இயேசு, உங்களால் அவரைக் காணமுடியாவிட்டாலும் உங்களுடனிருக்க வாக்களித்துள்ளார்
- இயேசு, உங்கள் நெருங்கிய நண்பனாகவிருக்க வாக்களித்துள்ளார்.
- இயேசு, நீங்கள் செய்த எல்லா தவறான செய்கைகளுக்கும் மன்னிப்பளிக்க வாக்களித்துள்ளார்.
- இயேசு, உங்களுக்குள்ளே ஜீவிக்க வாக்களித்துள்ளார்.
  .. நீங்கள் அன்பை உணரும்போது அல்லது வேதனைப்படுத்தப்படும்போது
  .. நீங்கள் மகிழ்ச்சியாயிருக்கும்போது அல்லது துக்கப்படும்போது
- இயேசு, நீங்கள் மரித்ததின் பின் தன்னோடு சதா காலத்திற்கும் ஜீவிக்கலாம் என்று வாக்களித்துள்ளார்.

இந்த இயேசு இப்போது உங்களுக்குள்ளே ஜீவிக்க வரும்படி அழைப்பு விடுக்க விரும்புகிறீர்களா?

"நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20)
"நான் உன்னை விட்டு விலகுவதில்லை" (எபிரேயர் 13:5)





## கடவுளுடன் பேசுங்கள்...

உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இவ்விதமான ஒரு வேண்டுதலை ஏறெடுங்கள்.

அன்பான கடவுளே, இயேசு உங்கள் திருக்குமரன் என்று நம்புகிறேன். நான் செய்த தவறுக்காக இயேசு மரித்ததற்காக நன்றி கூறுகின்றேன். தவறான காரியங்களைச் செய்த என்னை மன்னியுங்கள். இயேசு எப்போதும் என்னோடும் எனக்குள்ளும் இருக்கும்படி வேண்டுகிறேன். எனது வேண்டுதலைக் கேட்டதற்காக நன்றி,

இந்த வேண்டுதலை இப்போதே செய்ய விரும்புகிறீர்களா?
கடவுளது வாக்குறுதியை நம்புங்கள்.
அதாவது அவர் உங்களை நேசிக்கிறார். இயேசு உங்களோடு எப்போதும் இருப்பார்.

“அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)

---

வேண்டுதல்: மௌனமாகவோ அல்லது சத்தமாகவோ கடவுளுடன் பேசுதல்





நீங்கள் உங்களை மன்னிக்கும்படியும், இயேசுவை உங்களுடன் இருக்கும்படியும் வேண்டும்போது... அவர் உண்மையாகவே உங்களோடும் உங்களுக்குள்ளும் இருக்கிறார். இப்போதும் எப்போதும்

உங்களால் அவரைப் பார்க்க முடியாது. நீங்கள் வித்தியாசமாக உணரவும் மாட்டீர்கள். ஆனால் இயேசு மெய்யாகவே உங்களோடிருக்கிறார். அவர் உங்களுடனிருப்பேனென்று வாக்குப்பண்ணினதால் அவர் எப்போதும் அவரது வாக்கை காப்பாற்றுவார்.

தினமும் இயேசுவுக்கு நன்றி கூறுங்கள்
உங்களோடு இருப்பதற்காக
அவரோடு ஜீவிக்க உங்களுக்கு உதவி செய்வாராக.

---

விசுவாசம்: எம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், வித்தியாசமாக உணராவிட்டாலும் கூட கடவுளது வாக்குறுதியையும், கடவுளது குமாரனையும் நம்புதல்.

நீங்களெல்லாம் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. (கலாத்தியர் 3:26)





இயேசுவை உங்களுடனிருக்கும்படி அழைப்பு விடுத்த பின்பும், நீங்கள் சிலவேளை சிலருக்கு அன்பு காட்டாதிருக்கலாம், அல்லது பொய் சொல்லக்கூடும், அல்லது கீழ்ப்படியாதிருக்கக்கூடும், அல்லது சுயநலமாக சிந்திக்கக்கூடும்.

நீங்கள் செய்தது தவறு என்று உங்களுக்கு தெரியும் போதெல்லாம் கடவுளுடன் பேசுங்கள். நீங்கள் சிந்தித்த, செய்த, பேசிய காரியங்கள் அவருக்கு பிடித்தமற்றவை என்பதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்களை மன்னித்ததற்காக அவருக்கு நன்றி கூறுங்கள்.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)

---

அறிக்கையிடுதல்: கடவுள் யார் என்ற உண்மையை கூறுதல், நீங்கள் செய்த, பேசிய, சிந்தித்த விடயங்கள் அவருக்கு பிடித்தமற்றவை என ஒத்துக்கொள்ளுதல்.

கடவுள் வேறும் பல அற்புதமான வாக்குறுதிகளையும் அளித்துள்ளார். இயேசுவுடன் உங்கள் புதிய வாழ்வு வளர உதவி செய்வதாக வாக்களித்துள்ளார்.





நீங்கள் கடவுளின் வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்ள..

.. இந்த கையேட்டிலுள்ள வேத வார்த்தைகளை வாசிப்பதன் மூலம்

.. இயேசுவைப் பற்றி போதிக்கப்படும் இடங்களுக்குப் போவதின் மூலம்

.. தினமும் அவரோடு பேசுவதின் மூலம்

இயேசுவைப் பற்றி நீங்கள் அறிந்ததை உங்கள் குடும்பத்தினர், நண்பர்களுக்குச் சொல்லலாம்.
இந்தக் கையேட்டினை அவர்களுக்கு வாசித்துக் காட்டி அவர்கள் கடவுளது மன்னிப்பை பெற உதவவும்.
உங்கள் உதவி மூலம் அவர்கள் இயேசுவிடம் வரவும், அவர்களோடும், அவர்களுக்குள்ளும் இயேசு இருக்கும்படி அழைப்பு விடுங்கள்.


எப்போதும் இறைவனது வாக்குறுதியை நம்புங்கள்... அவர் சொன்னதை செய்வார்.

எனது வாக்குறுதி...

இன்று நான் கேட்டபோது கடவுள் எனது சிந்தனை, பேச்சு, செயலில் நான் செய்த எல்லா தவறுகளையும் மன்னித்தார். இயேசு இப்போது என்னோடும் எனக்குள்ளும் இருக்கிறார். இயேசு விரும்புகிற நபராக இருக்க நான் விரும்புகின்றேன். கடவுளையும் மற்றவர்களையும் நேசிக்கும் ஒரு நபராக இருக்க விரும்புகிறேன்.

எனது பெயர்: ..............................

திகதி:..............................



Written by Vernie Schorr TGP—Tamil
©1990 The JESUS Film Project
Reprinted by Foursquare Missions Press with permission.

Bible Verses in this book worded for ease of understanding.

Pictures in this booklet used by permission of The JESUS Film Project and taken from "JESUS," a 2-hour film on the life of Christ. For more information on "The Story of Jesus for Children" video or additional material, contact: The Story of Jesus for Children, 910 Calle Negocio, Ste. 160, San Clemente, CA 92673, USA, 1-800-432-1997, www.jesusforchildren.org